பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 08 திங்கட்கிழமை 22.06.2020 கதிர் 97

# பொறிக்குள் மாட்டிய கருணா; விசாரிக்க அழைத்தது சி.ஐ.டி.

கொழும்பு, ஜூன் 22

கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்து தொடரிபில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் இன்று காலை பணிப்புரை விடுத்திருந்தார். இதையடுத்துக் கருணாவை விசாரணைக்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

நாவிதன்வெளி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன், 'ஆனையிறவு சண்டையில் ஒரே இரவில்

2

## முகமாலையில் வெடிமருந்தை கடத்த முயற்சி!
### இருவர் சிக்கினர்



யாழ்ப்பாணம், ஜூன் 22

முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் தொண்டு நிறுவனத்தின் பட்டறையிலிருந்து வெடிமருந்தைக் கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வெடிமருந்து கடத்தல் முயற்சி நேற்று மாலை இடம்பெற்ற

2

## சுகாதார பரிசோதகரை தாக்கியவர் மாட்டினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். நகரப் பகுதியில் கழிவுப் பொருள்களை கொட்டவந்த வேளை அதனைத் தடுக்க முற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றவர் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டின் உதவியுடன் இனம் காணப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அத்தியடிச் சந்தி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு

2

# இணக்க அரசியல் காலத்தின் கட்டாயம்!



## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா கருத்து

**கொழும்பு, ஜூன் 22**

**தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் இணக்க அரசியலில் பிரவேசிப்பது இன்றைய கால கட்டத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளையின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.**

2



கருணாவின் கருத்துக்கு

## கோட்டா, மஹிந்த பதிலளிக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 22

கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசு பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர்

2

## சஜித்தையும் விசாரியுங்கள்
### கோருகிறார் கருணா



மட்டக்களப்பு, ஜூன் 22

என்னை மட்டுமல்ல சஜித் பிரேமதாஸவையும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்க வேண்டுமென தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா தெரிவித்துள்ளார்.

ஆனையிறவில் ஒரே இரவில் 3000 இராணுவத்தினரைக் கொன்றேன் எனக் கருணா தெரிவித்த கருத்து தொடர்பாக தென்னிலங்கையில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த நிலையில், இது குறித்து விசாரணை நடத்த சி.ஐ.டியினருக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

விரைவில் அவர் விசாரணைக்கு அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும்

2

**நயினாதீவு ஆலய விவகாரம்:**

## உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூனி அம்மன் ஆலய உற்சவத்தின்போது, பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்ட படையினர், காலணிகளுடன் ஆலயத்துக்குள் சென்றமை தொடர்பாக உடனடி விசாரணையை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக, வட.பிராந்தியப் பிரதிப்

2


## ஆலயத்துக்குள் பாதணி; கண்டிக்கின்றார் மாவை

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசனி அம்மன் ஆலய உற்சவத்தின் போது படையினர் ஆலயத்துக்குள் பாதணிகளுடன் சென்ற சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தமிழரசுக் கட்சியின்

2



மளிகைப் பொருள்கள் உங்கள் வீடு நோக்கி...!
யாழ் நகரில்
Semba STORE இன் விநியோக சேவை
077 411 4422
Payment method - cash on delivery





## முகமாலையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் சந்தேக நபர்கள் இன்று முற்பகல் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் உள்ள கண்ணி வெடி அகற்றும் தொண்டு நிறுவனத்தின் பட்டறையில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளில் இருந்து சி - 4 அல்லது ரினன்ரி வெடிமருந்தைத் திருடிய இருவர் தப்பிக்க முயன்றனர்.

அதன்போது தொண்டு நிறுவனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களைக் கண்டுள்ளார். பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கண்டதும் வெடிமருந்துப் பொதியை அங்கேயே கைவிட்டு மோட்டார் சைக்கிளில் அவர்கள் தப்பியுள்ளனர்.

அவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பியதைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் தனது அலைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும் இராணுவத்தினர் வெடிமருந்துப் பொதியை மீட்டனர். அதனுள் சுமார் 2 கிலோ கிராம் எடையுடைய ரினன்ரி அல்லது சி - 4 வெடிமருந்து காணப்பட்டது.

இந்த நிலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் வழங்கிய ஒளிப்படத்தில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டின் அடிப்படையில் சந்தேக நபர்கள் மானிப்பாய், அளவெட்டி, ஏழாலைப் பகுதிகளில் தேடப்பட்டனர்.

எனினும் சந்தேக நபர்களில் ஒருவர் எழுதுமட்டுவாழில் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். மற்றொருவர் அரியாலையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேக நபர்கள் இருவரும் முகமாலைப் பகுதிக்கு கருக்கு மட்டை வெட்டுவதற்கு செல்பவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார பரிசோதகரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் காயத்துடன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகரைத் தாக்கிவிட்டுத் தப்பியோடியவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் ஒரு பெண்மணியின் பெயரில் உள்ளமை கண்டறியப்பட்டதோடு, அதனை யாழ். வைத்தியசாலை வீதியில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவர் பயன்படுத்தி வந்தமை இனம்காணப்பட்டது.

இந்த விடயம் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு இதன் அடிப்படையில் பொதுச் சுகாதார அதிகாரியால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## சஜித்தையும் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில், இன்று அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர். அந்தக் காலம் வரக்கூடாதென்ற அடிப்படையிலேயே பேசினேன். ஆனால், சஜித் பிரேமதாஸ தரப்பினர் தேவையில்லாமல் இதைப் பெரிதாக்குகின்றார்கள். எந்த விசாரணைக்கும் தயாராக இருக்கிறேன்.

என்னை மட்டுமல்ல சஜித் பிரேமதாஸவையும் விசாரணைக்கு அழைக்க வேண்டும். இந்தியாவுடனான யுத்தத்தின் பின் புலிகள் அழியும் நிலையிலிருந்தபோது, பிரேமதாஸதான் துப்பாக்கிகளும், ஒரு கோடி ரவைகளும் வழங்கி, புலிகளுக்கு உயிர்கொடுத்தார். ஐ.தே. கவினரும் விசாரிக்கப்படவேண்டும்.

அநுரகுமார திஸநாயக்கவும் விமர்சித்திருந்தார். அவருக்கு என்னை விமர்சிக்கத் தகுதியில்லை. சொந்த மக்களில் 80,000 பேரை அவரது கட்சி கொன்றது - என்றார் கருணா.

## உடனடி விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ்மா அதிபரை இன்று திங்கட்கிழமை காலை தொடர்புகொண்டு பிரதமர், உடனடி விசாரணைக்கு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் பொலிஸ்மா அதிபருக்கு அவர் பணித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, நயினாதீவுப் பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சம்பந்தப்பட்ட படையினரை அழைத்து, விசாரணை நடத்தியுள்ளார் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படையினர், தாம் வேண்டும் என்றே இவ்வாறு செய்யவில்லை எனவும் இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாது எனவும் உறுதியளித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

## ஆலயத்துக்குள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இன்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## பொறிக்குள் மாட்டிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொன்றோம்' என்று தெரிவித்திருந்தார்.

அவரின் இந்த அறிவிப்பு தெற்கு அரசியலில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கண்டனத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தபோது தம்மால் இழைக்கப்பட்டதாகக் கருணாவால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு சி.ஐ.டிக்கு பதில் பொலிஸ்மா அதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# 9 ஆவது நாடாளுமன்றக் குழு அமர்வுகளை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் நடத்த திட்டம்



கொழும்பு, ஜூன் 22
கொரோனா வைரஸ் தொற்று நோய் சூழ்நிலையில் சமூக இடைவெளி பற்றிய வழிகாட்டல்கள் தொடர்ந்தால் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் குழு அமர்வுகளை டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான இயலுமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்கான ஒத்திகை அமர்வொன்று நாடாளுமன்றக்குழு அறையில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, பிரதி செயலாளர் நாயகமும், பணியாட்தொகுதி பிரதானியுமான நீல் இத்தவெல மற்றும் நாடாளுமன்ற சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்மூலம் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் டிஜிட்டல் தொழில்நுட்பம் ஊடாக ஒன்லைன் மூலம் குழு அமர்வுகளில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்.

நாடாளுமன்ற அமர்வுகள் அற்ற தினத்தில் இடம்பெறும் குழு அமர்வுகளில் கூட உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு நேரடியாக சமுகமளிக்காது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக குழு அமர்வுகளில் பங்கேற்கும் வகையில் இதனைப் பயன்படுத்துவது பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

குழு அறைகள் சிலவற்றில் இடம்பெறும் அமர்வுகளை ஒளிப்பதிவு செய்வதற்கான கமரா கட்டமைப்புக்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டிருப்பதால், ஒன்லைன் முறைமையில் குழு அமர்வுகளை நடத்துவது வெற்றிகரமாகப் பரீசீலித்துப் பார்க்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார். காணப்படும் சிறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் தற்பொழுது 8 குழு அறைகள் மாத்திரமே காணப்படுவதால் நாடாளுமன்ற அமர்வு தினத்தில் ஏற்படும் நெரிசல்களைக் குறைப்பதற்கும், செலவிடும் காலம் மற்றும் ஏற்படும் செலவீனங்களைக் குறைப்பதைக் கவனத்தில் கொண்டும் கொவிட் தொற்றுநோய் சூழல் முடிவடைந்த பின்னரும் இந்த முறையினை நடைமுறைப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்றும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய ஒன்பதாவது நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இது தொடர்பான யோசனையொன்றை முன்மொழிய விருப்பதாகவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க சுட்டிக்காட்டினார்.

## கோட்டா, மஹிந்த ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் கூறினார்.

கருணா அரசின் அணியில் உள்ளார். எமது அணியில் யாராவது அவ்வாறு தெரிவித்திருந்தால் இந்த நேரம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்களா? கருணாவின் கருத்து தொடர்பில் பதில் சொல்ல வேண்டிய அரசு அமைதியாக உள்ளது. ஏனையவர்கள் பதில் சொல்வதை விட, ஜனாதிபதியும் பிரதமரும் இதற்குப் பதில் வழங்க வேண்டும் - என்றார்.

## இணைக்க அரசியல் காலத்தின் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய அரசு எதிர்வரும் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

முன்னொரு காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழரசுக் கட்சி இணைந்து செயற்படுவது என்பது கேள்விக்குறியான விடயமாக இருந்தது. தமிழ் மக்கள் பலரும் அதனை விரும்பாதவர்களாகக் காணப்பட்டனர். ஆனால், இன்றைய நிலைமை வேறாக உள்ளது.

இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதியாக இருக்கப் போகின்றார். அடுத்து வரும் நாடாளுமன்றம் நிச்சயமாக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒரு அமைச்சரவையைக் கொண்ட நாடாளுமன்றமாக அமையப் போகின்றது.

எனவே, தமிழ் மக்களின் சார்பாக இருக்கும் கட்சிகள் இவர்களுடன் எதிர்ப்பு அரசியலை நடத்தி எவ்வித மான பிரயோசனமும் இல்லை.

ஆகவே, விரைந்து சென்று தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்து அரசமைப்பில் தமிழ் மக்களுக்குச் சார்பான மாற்றங்களை - திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். அதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

அந்த அடிப்படையில் இன்றைய அரசு நாளைய நாடாளுமன்றத்தை அமைக்கின்றபோது அதில் அவர்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு துணையாக இருக்க வேண்டும்.

அவர்களுக்கு எமது ஆதரவைத் தெரிவிப்பதன் ஊடாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் ஆதரவைத் தருவார்கள்.

எனவே, இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் - என்றார்.

# 43 இந்தியர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 22
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவுக்கு செல்ல முடியாமல் இலங்கையில் சிக்கியிருந்த 43 இந்தியர்கள் இன்று விசேட விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளனர்.

வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாவுக்காக வருகை தந்த நிலையில் நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் சிக்கியிருந்தவர்களில் 43 பேர் இவ்வாறு இன்று காலை விசேட விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இந்தியன் விமானசேவைக்குச் சொந்தமான ஏ.ஐ. 282 என்ற விமானம் மூலம் இன்று காலை 9.23 மணியளவில் டில்லி நோக்கிப் பயணித்தனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தடை சட்டம்

உலகம் முழுவதிலும் மிக மோசமான – மிகக் கீழ்த்தரமான – மிகக் கொடூரமான – சட்டமாகக் கருதப்படுவது பயங்கரவாதத் தடைச் சட்டமாகும்.

பல்வேறு நாடுகளிலும் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் இப்படித்தான் விமர்சிக்கப்படுகின்றன. அதிலும் இலங்கையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மனித நாகரிகத்துக்கே முரணானது – காட்டுமிராண்டித்தனமானது – என்று கண்டிக்கப்படுகின்றது.

நல்லாட்சி அரசின் காலத்தில் அரசே நாடாளுமன்றத்தில் அதனை வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் ஒப்புக் கொண்டது. அதனடிப்படையில் அந்தச் சட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாகக் கொண்டு வரப்படும் ஒரு சட்டமூலமும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அதிலும், சில ஷரத்துக்கள் சர்வதேச மனித உரிமைகள் தரத்துக்குப் பொருந்தாதவை என்ற அடிப்படையில் சில குறைபாடுகள் சர்வதேச தொண்டு நிறுவனங்களினால் சுட்டிக் காட்டப்பட்டமையை அடுத்து அந்தச் சட்டமூலத்தில் அவற்றைத் திருத்தி, மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் என்ற பெயரில் காலம் இழுத்தடிக்கப்பட்டது. அதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, மாற்றீடான புதிய சட்டம் கொண்டு வரும் முயற்சி சாத்தியமற்றுப் போனது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றமையை அடுத்து உருவாக்கப்பட்ட இடைக்கால அரசின் முதல் தீர்மானங்களில் ஒன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் முடிவையும், அதற்கு மாற்றீடாகப் புதிய சட்டமூலத்தைக் கொண்டு வரும் முயற்சியையும் ரத்துச் செய்வதாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை கோட்டா – மஹிந்த அரசு எடுத்த போதே நாடு மீண்டும் பழைய இருண்ட யுகத்துக்குள் நுழையப் போகின்றது என்ற அச்சம் சகல தரப்புகளிலும் ஏற்பட்டு விட்டது.

இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை அரங்கேறியமைக்குப் பின்புலமாகவும், களம் அமைத்துத் தருபவையாகவும் இருந்தவை பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டமும் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் ஆகும்.

பொலிஸ், இராணுவக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை, அச்சுறுத்தி, அடித்துச் சித்திரவதை செய்து, பலவந்தப்படுத்தி, சில ஒப்பங்களைப் பெற்றுவிட்டு, அவற்றை அவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அவற்றினடிப்படையில் பயங்கரவாதக் குற்றத் தண்டனை வழங்குவதற்கு இந்தச் சட்டம் வழி செய்கின்றது.

ஒப்புதல் வாக்கு மூலங்கள் என்று கூறப்படும் இவை அச்சுறுத்தி, பலவந்தப்படுத்தி பெற்றவை, எதிரி சுயாதீனமாக வழங்கியவை அல்ல என்று நீதிமன்றத்தில் தெரிவித்தால், அதை – அப்படி அச்சுறுத்தித்தான் அந்த வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்பதை – எதிரியே நிரூபிக்க வேண்டும் என்ற விஷமத்தனமான அடிப்படையைக் கொண்டது இந்த நச்சுச் சட்டம்.

படையினர், பொலிஸார் காவலில் தனித்து விடப்பட்ட ஒரு கைதி, அங்கு தனக்கு நடந்த சித்திரவதைகள், அச்சுறுத்தலை நீதிமன்றத்தில் நிரூபிப்பது என்பது இலகுவானதல்ல. அப்படி நிரூபிக்காதவரை எதிரி குறறமிழைத்தவர்தான் என்று சுலபமாகக் கூறும் மோசமான சட்டமே இது.

படையினரின் காவலில் இருக்கும் எதிரி ஒருவர் தனக்கு அங்கு நேர்ந்த கொடூரத்தை சாட்சிகளோடு நிரூபிக்காதவரை எதிரியைக் குற்றவாளியாகக் காட்டும் இந்தச் சட்டம் மிகக் கொடூரமானது.

நிரூபிக்கும் கடப்பாடு (Burden of Proof) விவகாரத்தில் இந்தச் சட்டத்தின் மோசமான நிலைமையின் அடிப்படையில்தான் உலகம் இந்தச் சட்டத்தை வெறுத்து ஒதுக்குகின்றது.

இந்தச் சட்டத்தை விலக்கிக் கொள்வது என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்னெடுத்தது இலங்கை. இப்போது ஆட்சி மாற்றத்தை அடுத்து அந்த உறுதி மொழியில் இருந்து பின்வாங்கி விட்டது.

இதனைத்தான் இலங்கை தான் அளித்த வாக்குறுதியில் இருந்து பின்வாங்கிய விவகாரமாக ஐரோப்பிய ஒன்றியம் ஏமாற்றத்துடன் சுட்டிக்காட்டுகின்றது.

இந்தப் பின்வாங்கல் போக்கு ஒருபுறம் மீண்டும் நாட்டில் இருண்ட யுகம் கட்டவிழப் போகின்றது என்ற எச்சரிக்கையைத் தரும் அதேசமயம், மறுபுறம் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை போன்ற சர்வதேச சகாயங்களை இலங்கை இழக்கப்போகின்றது என்பதையும் காட்டிநிற்கின்றது.

# கூட்டமைப்பை பலமிழக்கச் செய்ய ஒருபோதுமே இடமளிக்கமாட்டோம்

## கூறுகிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி



மட்டக்களப்பு, ஜூன் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமிழக்கச் செய்வதற்குப் போராளிகளாகிய நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு எப்போதும் இருப்போம். உரிமைக்காகவும், தேசியத்திற்காகவும் குரல் கொடுப்போம் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேசியத்திற்காகப் போராடிய நாங்கள், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதற்குக் காரணம் 2001 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தலைவர் உருவாக்கினார். இதனைத் தற்போது ஒரு சிலர் மறுதலித்துப் பேசலாம்.

ஆனால் தலைவரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தான் தேசியத்துக்காகக் கதைக்கும் ஒரு கட்சியாக அவர் நியமித்தார்.

யுத்தம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் நீரோட்டத்தில் இணைந்த நாம் குறிப்பிட்ட சில வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பயணத்தில் இணைந்து செயற்படுகின்றோம். கடந்த மூன்ற வருடங்களாக நெருங்கிய நிலையில் செயற்பட்டு வருகின்றோம்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமக்கு உள்ளூராட்சி மன்றத்திற்கான ஆசனப் பங்கீடுகளை மேற்கொண்டது. அதேபோன்று தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலிலும், கிழக்கில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வேட்பாளர்களை நியமிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களுக்கு ஆசன ஒதுக்கீட்டைத் தந்தது.

இருப்பினும் எமது ஒற்றுமை காரணமாகவும், தேசியம் தொடர்பிலான எமது பற்றுக் காரணமாகவும் தற்போதைய நிலையில் தரப்பட்ட ஆசன பங்கீட்டை விட்டுக் கொடுத்துச் செயற்படுகின்றோம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உடைப்பதற்காகப் பல கட்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன. எமது போராளிகளைப் பயன்படுத்தியும் இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் எமது கட்சியைப் பொறுத்தவரை நாங்கள் எப்போதும் தமிழ்த் தேசியத்தினோடே பயணிப்போம். எதிர்வரும் காலங்களிலும் எமது பிரதிநித்துவங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஏற்படுத்தப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். அதனைப் பலமிழக்கச் செய்ய முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பலமிழக்கச் செய்வதற்குப் போராளிகளாகிய நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு எப்போதும் இருப்போம். உரிமைக்காகவும், தேசியத்திற்காகவும் குரல் கொடுப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வெல்ல வைப்போம் – என்றார்.

# வறுமையில் வாழும் குடும்பதிற்கான புதிய வீட்டுக்கு அடிகல் நடப்பட்டது









யாழ்ப்பாணம், ஜூன் 22

போரால் பாதிக்கப்பட்ட – வறுமைக் கோட்டின் கீழ் வாழும் – குடும்பத்திற்கான புதிய வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவு வட்டாரம் ஜே 27 கிராம சேவையாளர் பிரிவில் 'தியாகி அறக்கொடை' நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில், அமைக்கப்படும் இந்த வீட்டுக்கான அடிக்கலை யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி ரூவான் வணிகசூரிய நேற்று நாட்டி வைத்தார்.

யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் சமூக சேவைகளில் ஒன்றாகிய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்திற்கு வீடு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

512 பிரிகேட்டின் படைத் தலைமையகமான 51 ஆவது டிவினினால் இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தற்கொலையா, கொலையா? படமாகிறது சுஷாந்சிங்வாழ்வு

இந்தியக் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனியின் வாழ்க்கை வரலாறு படத்தில் நடித்துப் பிரபலமான பொலிவூட் நடிகர் சுஜுந்த் சிங் கடந்த வாரம் உயிரிழந்திருந்தார்.

தற்கொலையா கொலையா என்ற பெயரில் அவரது வாழ்க்கை வரலாறு திரைப்படமாக இருக்கிறது. பொலிவூட்டில் சில முன்னணி நடிகர்களின் ஆதிக்கத்தால் தொடர்ந்து பட வாய்ப்புகளை இழந்ததால் மன அழுத்தத்தில் சுஜுந்சிங் உயிர் மாய்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.



அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஒரு தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் சுஷாந்த் சிங் வாழ்கை திரைப்படமாக இருக்கிறது.

தற்கொலையா? கொலையா? : ஒரு நடிகன் மறைந்து விட்டான் என அந்தப் படத்துக்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த படத்தை ஜுமிக் மௌலிக் என்பவர் இயக்குகிறார். சினிமா பின்புலமே இல்லாத குடும்பங்களில் இருந்து வரும் நடிகர்களைத் திரையுலகம் எப்படி நடத்துகிறது, அவர்கள் தங்கள் இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு எப்படியெல்லாம் போராட வேண்டியிருக்கிறது என்பது தான் இந்தப் படத்தின் கதைக்களம் என்று கூறப்படுகிறது.






# பதற்றம் அதிகரித்த நிலையில் பள்ளத்தாக்கில் புதிய பாலம்!

## இந்திய இராணுவம் அதிரடி

இந்தியா - சீனா எல்லைப் பகுதியான கல்வான் பள்ளத்தாக்கின் சீன எல்லை அருகே இந்திய இராணுவம் புதிதாகப் பாலம் ஒன்றை அமைத்துள்ளது.

இந்தப் பாலத்தின் மூலம் எல்லைக்கு மிக அருகே இராணுவத் தளவாடங்களைச் சுலபமாகக் கொண்டு செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்வான் பள்ளத்தாக்கின் எல்லையோரத்தில் உள்ள ஷ்யோக் ஆற்றின் குறுக்கே இந்திய இராணுவம் இந்தப் பாலத்தை அமைத்துள்ளதாகவும் கொங்கிறீட் மற்றும் இரும்பால் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் மூலம் கல்வான் ஆறு மற்றும் ஷ்யோக் ஆறு சங்கமிக்கும் முக்கிய பகுதியை எளிதில் அடையலாம் என்றும் சொல்லப்படுகிறது.

முன்னதாக மரக்கட்டைகளால் அமைந்திருந்த இந்தப் பாலம் ஊடாக இராணுவத் தளவாடங்களைக் கொண்டு செல்ல முடியாமல் இருந்ததாலேயே அது மறு சீரமைக்கப்பட்டுள்ளதாக இந்திய இராணுவத் தரப்பு தெரிவிக்கிறது.

இந்திய - சீன எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டில் இருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் இந்தப் பாலம் அமைந் துள்ளது. எல்லையில் அண்மையில் நடைபெற்ற மோதலையடுத்தே இந்தப் பாலத்தின் கட்டு மானப்பணிகள் துரிதப் படுத் தப்பட்டு 72 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

சீனாவுடன் மோதல் அதிகரித்து வரும் நிலையில் இந்தப் பாலம் அவசர அவசரமாகத் திருத்தியமைக்கப்பட்டமையானது எல்லையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி எல்லைப் பாதுகாப்பை உறுதிசெய்ய எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# தமிழகத்தில் முழு முடக்கம்



தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் எந்தத் தளர்வும் இல்லாத முழுமையான ஊரடங்கு நேற்று நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதனால் சென்னை கிண்டி கத்திப்பாரா மேம்பாலம் பின்னணியில் விமான நிலையம், பறங்கிமலை மற்றும் ஜிஎஸ்டி வீதி ஆகியன வெறிச்சோடிக் காணப்பட்டன. கடைகள் ஒன்றுவிடாமல் மூடப்பட்டன. மக்கள்நடமாட்டமில்லாமல் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தமிழகத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகிறது. குறிப்பாக சென்னை மற்றும் அதை ஒட்டியுள்ள செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதைக் கட்டுப்படுத்த இந்த மாவட்டங்களின் சில பகுதிகளில் ஜூன் 19ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை 12 நாள்களுக்கு முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுழு ஊரடங்கு மட்டுமல்லாது, சூரிய கிரகணமும் நிகழ்ந்ததால் பெரும்பாலான மக்கள் வீடுகளில் முடங்கினர்.

# சாதனை நிகழ்த்தியது பசு ஒரு நாளில் 76லீற்றர் பால்



இந்தியாவின் ஹரியாணா மாநிலத்தில் பசு ஒன்றில் இருந்து 24 மணி நேரத்தில் 76.61 லீற்றர் பால் கறந்தெடுக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தின் ஹோல்ஸ்டெயின் பிரைசியான் என்ற இனத்தைச் சேர்ந்த ஜோகன் என்ற குறித்த பசு 24 மணி நேரத்தில் 76.61லீற்றர் பாலைச் சுரந்துள்ளது. இதற்கு முன்பு அந்தப் பகுதியில் ஒரு பசு 65 லீற்றர் பாலையும், பஞ்சாபில் ஒரு பசு 72 லீற்றர் பாலையும் சுரந்ததே சாதனையாக இருந்து வந்தது.

இந்த நிலையில் அந்த 2 சாதனைகளையும் இந்தப் பசு முறியடித்துள்ளது. கர்னாலின் நிலோகேரி பிளாக்கலிப் கேரி கிராமத்தைச் சேர்ந்த பல்தேவ் சிங் என்பவருக்கு சொந்தமான பசு இது. இந்தப் பசுவுக்கு 4 வயதாக இருந்தபோது 24 மணி நேரத்தில் 42 லீற்றர் பாலைச் சுரந்து சாதனை படைத்தது. தற்போது இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது. இதற்காகப் பல்வேறு விருதுகளையும் இது வென்றுள்ளது.

# சென்னையில் புதுவித வெட்டுக்கிளிக் கூட்டம்!



சென்னை திருவொற்றியூர் பகுதிக்குள் வெட்டுக்கிளிகள் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை திருவொற்றியூர் ஜோதி நகர் மணலி விரைவு வீதிச் சந்திப்பில் உள்ள காலி இடம் மற்றும் மழைநீர் கால்வாயை ஒட்டி உள்ள எருக்கஞ்செடிகளில் கடந்த 2 நாள்களாக வித்தியாசமான நிறம் மற்றும் உருவத்தில் பெரிய அளவிலான வெட்டுக்கிளிகள் அமர்ந்திருந்தன எனவும், அந்தச் செடியில் இருந்த அனைத்து இலைகளையும் தின்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள எருக்கஞ்செடிகள் அனைத்தும் இலைகள், பூக்கள் இல்லாமல் காட்சி அளிக்கின்றன. அங்குள்ள ஏனைய செடிகளையும் இந்த வெட்டுக்கிளிகள் திண்கின்றன. கொரோனா தடுப்பு பணிக்காக அந்தப் பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க வந்த ஊழியர்கள், கிருமி நாசினி தெளித்தும் இந்த வெட்டுக்கிளிகள் சாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவொற்றியூர் பகுதியை அடுத்துள்ள பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் விவசாய நிலங்கள் இருப்பதால் அவற்றுக்கும் இந்த வெட்டுக்கிளிகளால் பாதிப்பு ஏற்படுமோ என அந்தப் பகுதி மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

# கீழடியில் பெரும் தொழிற்கூடம்!



கீழடி அகழாய்வில் தொழிற்கூட அமைப்பொன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களில் இந்தியத் தொல்லியல் துறையினரால் அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. மணலூரில் சுடு மண்ணாலான உலை, கீழடியில் விலங்கின் எலும்பு, வடிகால் அமைப்பு, கொந்தகையில் முதுமக்கள் தாழிக்குள் மனித எலும்பு, 2ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முந்தைய குழந்தையின் எலும்புக்கூடு, அகரத்தில் மண்பானைகள், 17ஆம் நூற்றாண்டுக்குரிய தங்க நாணயம் எனப் பல பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது கீழடியில் 13 அடி நீள தொழிற்கூட அமைப்பு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. அதன் அருகே நெருப்பு மூலம் இரும்பு உள்ளிட்டவற்றைப் பயன்படுத்திப் பொருள்கள் தயாரித்ததற்கு அடையாளமாகக் கறுப்பு நிறச் சாம்பல் துகள்கள் இருந்தன.

இதன்மூலம் அந்தக் காலத்தில் தொழில் நகரமாக இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பரிசோதனையைக் குறைத்தால் பாதிப்புகள் வெளியே தெரியாது



## ட்ரம்ப்பின் ஐடியா இது

கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைக் குறைத்தால் தொற்றாளர்கள் அதிகரிப்பது தெரியவராது என்று வல்லரசு நாடாகக் கருதப்படுகின்ற அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில், கடந்த சனிக்கிழமை அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தின் துல்சா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசியபோதே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பரிசோதனையைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளைக் கேட்கிறேன். ஏனென்றால், அதிகமாகப் பரிசோதனைகளைச் செய்வதால் இன்னும் கூடுதலாக நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள்.

கொரோனா பரிசோதனை என்பது இரண்டு பக்கமும் கூர்மையான வாள். அதன் மோசமான பகுதி பரிசோதனைதான். நீங்கள் எந்தளவுக்குப் பரிசோதனைகளைச் செய்கிறீர்களோ, அந்த அளவுக்குக் கூடுதலாகத் தொற்றுப் பாதித்தவர்களைக் கண்டறிய முடியும். எனவே பரிசோதனைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஆனால், பரிசோதனைக்கு மேல் பரிசோதனை என்று செய்து கொண்டே இருக்கிறார்கள் - என்றார். எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி அமெரிக்காவில் நடபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மறுபடியும் ட்ரம்ப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போல்டனின் எழுத்து பொய்யானது தென்கொரியா தரப்பில் தெரிவிப்பு



அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் எழுதி வெளிவரவிருக்கின்ற புத்தகத்தில் அமெரிக்காவின் தலைவர்களுக்கும் வட - தென் கொரியாக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவறானவை என்று தென் கொரியா தெரிவித்தது.

‘இது நடந்த அறை: ஒரு வெள்ளை மாளிகை நினைவகம்’ என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார் ஜோன் போல்டன். அந்தப் புத்தகம் வெளியாவதற்கு முன்னர் அமெரிக்க ஊடகங்கள் அதன் சில பகுதிகளை வெளியிட்டன. இதனால் போல்டனின் புத்தகம் குறித்த பர பரப்பு அமெரிக்காவில் பரவியது.

இந்த நிலையிலேயே தென்கொரியா தரப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரியத் தலைவர் கிம் – ட்ரம்ப் இருவரிடமும் தனது சொந்த ’ஒருங்கிணைப்பு’ நிகழ்ச்சி நிரலுக்காக வட கொரியாவுடனான உறவை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள மூன், நம்பத்தகாத எதிர்பார்ப்புகளை எழுப்பியதாகப் போல்டன் எழுதியுள்ளார்.

அதை மேற்கோளிட்டுக் கருத்துத் தெரிவித்தபோதே தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுங் யூய் - யோங், இது துல்லியமான உண்மைகளைப் பிரதிபலிக்காது, உண்மைகளைச் சிதைக்கிறது என்று தெரிவித்தார்.

# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் ஆப்கானிஸ்தானில் 3 பொலிஸார்

ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணமான பக்லானில் புல் - யு - குமாரி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் 3பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலைத் தலிபான்கள் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் பொலிஸ் நிலையத்தைச் சுற்றி வளைத்துத் துப்பாக்கியால் சுட்டும் கைக்குண்டுகளை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் இந்தத் தாக்குதலிலேயே 3பொலிஸார் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் ஆயுததாரிகள் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட, 5பேர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# பிரிட்டனில் நடந்த கத்திக்குத்து ஒரு பயங்கரவாதத் தாக்குதல்

## பொலிஸ் தரப்பில் தெரிவிப்பு

பிரிட்டனின் தலைநகர் லண்டனுக்கு மேற்கே 65 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பூங்காவொன்றில் நபர் ஒருவர் மேற்கொண்ட கத்திக்குத்துத் தாக்குதலில் 3பேர் கொல்லப்பட்டனர்.

பலர் காயமடைந்தனர். கத்திக்குத்தை நடத்திய நபர் கைதுசெய்யப்பட்டார். அது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கைது செய்யப்பட்ட நபர் கைரி சதல்லா (வயது 25) லிபியாவைச் சேர்ந்தவர் என்றும் கடந்த ஆண்டு பிரிட்டனின் உள்நாட்டு பாதுகாப்பு நிறுவனம் ஒன்றுடன்அவருக்குத்தொடர்புஇருந்ததாகவும்தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் இது பயங்கரவாதத் தாக்குதலா கத் தெரியவில்லை என்றும் நீண்ட விசாரணை களின் பின்னர் இது ஒரு பயங்கரவாதச் சம்பவம் என்று தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலால் தான் திகைத்துப்போயுள்ளன என்றும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்காகத் பிரிட்டன் தனது சட்டத்தை மாற்றும் என்றும் பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

# தேர்தல் பிரசாரத்தை முறியடிக்க இளைஞர்கள் கையாண்ட உத்தி

அமெரிக்க அதிபர் தேர்தல் நடக்கவிருக்கும் சூழலில் அதில் மீண்டும் போட்டியிடுகின்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரையைத் தொடங்கி உள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஒக்லகாமாவில் நடந்தது அவருடைய பரப்புரைக் கூட்டம். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்தவர்களை இளைஞர்கள் இணைந்து மட்டுப்படுத்தியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ட்ரம்பின் பரப்புரைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகச் செயலி ஒன்றின்மூலம் முன்பதிவு செய்துவிட்டு, அந்தக் கூட்டத்துக்குச் செல்லாமல் இருந்து அந்தக் கூட்டத்தில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கையில் சரிவை ஏற்படுத்தியதாக இளைஞர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ட்ரம்ப் தரப்பு இதை மறுக்கிறது. இந்த எதிர்ப்பாளர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டதாகவும். முன்பதிவின் போதே போலிக் கணக்குகள் அடையாளம் காணப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கிறது.

# கொரோனாவை கட்டுப்படுத்தினாலும் கட்டுப்பாடுகளை நீடிக்கிறது நியூஸி.

நாட்டுக்குள் நுழைகின்ற கப்பல்களுக்கான தடையை நீட்டித்ததுடன், தனிமைப்படுத்தலில் இருந்து வெளியேறுபவர்களுக்கான நடவடிக்கைகளையும் கடுமையாக்கியது நியூஸிலாந்து.

22 உயிரிழப்புகளுடன் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியதுடன், எந்தவொரு கொரோனாத் தொற்றாளர்களும் நாட்டில் இல்லை என்று அறிவித்த பின்னர் கொரோனா காரணமாக விதிக்கப்பட்ட அனைத்துக் கட்டுப்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவந்த உலகின் முதல் நாடுகளில் ஒன்று நியூஸிலாந்து. அண்மையில் அங்கு புதிய தொற்றாளர்களாக வெளிநாட்டவர்கள் இருவர் இனம் காணப்பட்டனர்.

இதையடுத்தே நியூஸிலாந்து கட்டுப்பாடுகளைத் திரும்ப அறிவித்திருக்கிறது. இதன்படி, கப்பல்கள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீடிக்கப்படுகின்றது என்று அந்த நாட்டின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்தார். அத்தோடு தொற்றாளர்கள், தொற்றுச் சந்தேகத்துக்குரியவர்களுக்குரிய தனிமைப்படுத்தல் விதிகள் கடுமையாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



## இந்தியாவில் சிக்கியிருந்த மேலும் பல பேர் நாட்டுக்கு!

இந்தியாவிலிருந்து 230 பேரை ஏற்றிய விமானமொன்று, இன்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந் தது.

கொரோனா வைரஸ் பரவல் இலங்கைக்கு வர முடியாமல் இந்தி யாவில் சிக்கியிருந்த இலங்கையர் களும், கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள வெளிநாட்டுக் கப்பலில் பணியாற்றுவதற்கான இந்தியக் கப்பல் பணியாளர்களும் இவ்வாறு வருகை தந்தனர்.

அவர்கள் இந்தியாவின் புதுடில் லியிலுள்ள விமான நிலையத்தி லிருந்து, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந் தனர்.

அவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்ததும் பி.சி.ஆர். பரிசோ தனைக்காக அனுப்பிவைக்கப் பட்டனர்.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிக்கத் தனி ஒழுங்கு

கொழும்பு, ஜுன் 22

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிக்கப் பிரத்தி யேக வாக்களிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

வடக்கில் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள ஊழியர்களை தெளிவு படுத்தும் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்தி ரிகைகளில் பணம் கொடுத்து செய் யப்படும் விளம்பரங்களைத் தடுப் பதற்குத் தனக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் கூறினார்.

எனவே வானொலிகள், தொலைக் காட்சிகள் போன்றவற்றில் ஒளி, ஒலி பரப்பாகும் செய்திகளில் வேட்பாளர் களுக்குச் சம அந்தஸ்து வழங்கு மாறும் அவர் கோரியுள்ளார்.

# பின்வாங்கியது இலங்கை அரசு

## ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 22

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்காக அளிக்கப்பட்ட வாக்குறுதி களில் ஒன்றான பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான வாக் குறுதியில் இருந்து இலங்கை விலகிச் சென்றுள்ளதென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட் டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது மனித உரிமைகள் மற் றும் உலகில் ஜனநாயகம் தொடர்பாக, 2019 வருடாந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது-

'புதிய ஜனாதிபதியும் அவரது இடைக் கால அரசாங்கமும் எடுத்த முக்கிய மான கொள்கை தீர்மானங்களில் ஒன்று, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதில்லை என்பதே ஆகும். மேலும் உத்தேச புதிய சட்டமூலத்தையும் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஜி.எஸ்.பி சலுகையைப் பெறுவதற்கான பேச்சுக்களின் போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது என்பதே ஆகும். ஆனால் இந்த வாக்குறுதியில் இருந்து இலங்கை பின்வாங்கியுள்ளது.

கடந்த 2015 ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மா னத்தை நிறைவேற்றுவதில் மட்டுப்படுத் தப்பட்ட அளவு முன்னேற்றமே ஏற்பட்டது - என்றுள்ளது.

## 18 மாவட்ட வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணி நிறைவுற்றது

நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற வுள்ள நிலையில், 18 மாவட்டங்களுக் கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன என அரச அச்சகர் கங்கானி லியனகே தெரி வித்துள்ளார்.

இதுவரை 11 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள், அச்சிடப்பட்டு தேர்தல் கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளன எனவும் எதிர்வரும் 25 ஆம் திகதி வாக்குச் சாவடிகளில் காட்சிப்படுத் தப்படும் பத்திரங்களை அச்சிட்டு முடிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறி னார்.

இதேவேளை, தேர்தலை நடத்துவதற் கான சுகாதார வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இன்று நள்ளிரவு, வெளியிடவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தொற்று ஏற்படாமல் தவிர்த்தல் கட்டளைச் சட்டத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட சுகாதார வழிமுறைகள் இந்த வர்த்த மானியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடற்பிரதேசங்களில் பலத்த காற்று வீசும் எனவும், கடல் கொந் தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, புத்தளத்திலி ருந்து, கொழும்பு, மாத்தறை, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரை ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும், கடற்பிரதேசங்களில் அவ் வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த கடற்பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களும், கடற்படையினரும் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளுமா றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது.

## தே.அ.அட்டைக்கான ஒருநாள் சேவை இன்று தொடக்கம் மீண்டும் ஆரம்பம்

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருநாள் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய ஒருநாள் சேவை முன்னெடுக் கப்படுகின்றது என ஆட்பதிவுத் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக, கடந்த மார்ச் 17ஆம் திகதி முதல் ஒருநாள் சேவை பணிகள் இடைநிறுத் தப்பட்டிருந்தன.

முதற்கட்டத்தின் கீழ், முன்னுரிமை அடிப்படையில் ஒருநாள் சேவை அடை யாள அட்டைகள் வழங்கப்படும் எனவும், ஒன்லைன் மூலமாக திகதி மற்றும் நேரத்தை பதிவு செய்யும் 250 பேருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# ஐ.தே.கவை பிளவுபடுத்தியவர் நவீன் திஸாநாயக்கவேதான்!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுன் 23

ஐக்கிய தேசியக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத் திய நவீன் திஸாநாயக்கவே, அமரர் ஆறுமுகன் தொண்டமான், பழனி திகாம்பரம் ஆகியோர் மீது போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கிடைப்பதற்கு தொண்டமான் முட்டுக்கட்டை யாக இருந்தார் என நவீன் திஸாநாயக்க தொலைக் காட்சி யொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப் பிட்டுள்ளார்.

ஆறுமுகன் தொண்டமான் இன்று உயிருடன் இல்லை. அவர் பதிலளிக்கமாட்டார் எனத் தெரிந்துதான் அவர் தலையில் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

அதேபோல் தீபாவளி முற்பணக் கொடுப்பனவுக்குத் திகாம்பரம் முட்டுக்கட்டையாக இருந்தார் எனவும் குறிப்பிடுகிறார். கொடுப்பனவை வழங்குமாறு அவர் தான் பேச்சு நடத்தினார். எனவே, எப்படி முட்டுக்கட்டை யாக இருக்கமுடியும்? எனவே நவீன் திஸாநாயக்க பொய்யுரைக்கும் அரசியலை முன்னெடுத்து வரு கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியை இரண்டாக பிளவுபடுத்தி ய நவீன் திஸாநாயக்கவே, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட் டுள்ளார். இவர்தான் கூட்டு ஒப்பந்தத்துக்கும் வருவார். எனவே, எப்படி சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பார்?

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிலேயே நாம் அங்கம் வகிக்கும் கூட்டணி என பதையும் மறந்துவிடாதீர்கள். நுவரெலியா மாவட்டத் தில் நாம் மூவரும் வெற்றிபெற்றால் திலகராஜ் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் வருவார். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

கோழிக் கூடு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (22.06.2020) தலைப்பு
கோழிக் கூடு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வண்ணத்தில் அல்லது கறுப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623





# மன்னாரில் ஆலயம் மீது தாக்குதல்

மன்னார் பிரதேச செயலக பிரிவு தள்ளாடி விமான ஓடுபாதை அருகில் காணப்பட்ட இந்துக்களின் சிற்றாலயம் இனம் தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது திருகேதீஸ்வரம் தள்ளாடி வீதி அருகில் அமைந்துள்ள பிள்ளையார் சிற்றாலயமே மேற்படி சேதமாக்கப்பட்டுள்ளது. சிற்றாலயத்தில் காணப்பட்ட இந்துக் கட வுள்களின் புகைப்படங்கள் ஆலயத்தின் வாசல் பகுதியில் உடைக்கப்பட்டுள்ளமை யுடன் சில படங்கள் அருகில் உள்ள பற்றைகாடுகளுக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அதே நேரத்தில் சிற்றாலயத்தின் வெளிப்பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை குப்பைகள், விறகுகளால் மூடப்பட்டு அவமரியாதைபடுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்தச் சிற்றாலயமானது தொடர்சியாக இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்படுவதும் சேதப்படுத்தப்பட் டும் வருகின்ற நிலையில் இந்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலை யத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

## எலிக்காய்ச்சலால் இதுவரையில் 12 பேர் பலி; 2,800 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 22

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் சுமார் 2,800 பேர், எலிக் காய்ச்சல் நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எலிக்காய்ச்சல் நோயால், இதுவரையான காலப்பகுதியில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, அம்பாந் தோட்டை, மாத்தறை, அநுராதபுரம், பொலனறுவை மற்றும் கேகாலை மாவட்டங்களிலேயே எலிக்காய்ச்சலால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். எனவே வைத்தியர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவாரத்திற்கு ஒருமுறையேனும், உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு வைத்திய நிபுணர் சுதத் சமரவீர மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## யாழ். ஆயர் - சுமந்திரன் சந்திப்பு



யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் கலாநிதி வண. யஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இன்று (திங்கட்கிழமை) காலை யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் முக்கியத்துவம், அதன் பெறுபேறுகள், தேசிய அரசியலில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் மற்றும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட களநிலைவரம் என்பன குறித்தும் இருவரும் சுமார் ஒருமணி நேரம் உரையாடினார்.

குறிப்பாக இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதத்தில் ஒவ்வொருவரும் தத்தமது வாக்குகளின் பெறுமதி உணர்ந்து செயற்பட வேண்டுமென்று ஆயர் வலியுறுத்தினார் எனத் தெரிய வருகிறது.

முக்கியமான ஒரு கால கட்டத்தில் தமிழ்மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் வகையில் தேவையற்ற சர்ச்சைகள் வேண்டுமென்றே கிளப்பிவிடப்படுவது குறித்து கவலை வெளியிட்ட ஆயர் வேட்பாளர்கள் சுயநலமற்றவர்களாகப் பொறுப்புடன் செயற்பட்டு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வெற்றிக்காக உழைக்கவேண்டுமென்று ஆசியும் வழங்கினார் எனக் கூறப்பட்டது.

# தமிழ் - சிங்கள இளைஞர்கள் கொக்குளாயில் கைகலப்பு!

## நேற்று அங்கு பதற்ற நிலைமை பொலிஸ், இராணுவம் குவிப்பு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு கொக்குளாய்ப் பகுதியில் தமிழ், சிங்கள இளைஞர்கள் ஒன்றுக்கூடி மது அருந்திய நிலையில் போதையில் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து ஏற்பட்ட பதற்றத்தால் நூற்றுக்கணக்காண இராணுவம், பொலிஸார் நேற்று அங்கு களம் இறக்கப்பட்டனர்.

கொக்குளாய் கருநாட்டக்கேணிப் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களும் இரு சிங்கள இளைஞர்களும் சேர்ந்து மதுபானம் அருந்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட மோதலில் தமிழ் இளைஞர் ஒருவர் தாக்க, சிங்கள இளைஞர் போதையின் காரணமாக வீழ்ந்துவிட்டார். இதன்போது கூடிருந்த இரண்டாவது சிங்கள இளைஞர் அங்கிருந்து சென்று முகத்துவாரம் பகுதியில் உள்ள சிங்கள மக்களிடம் தகவலை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் பொல்லுகள், தடிகள் சகிதம் இரு தமிழ் இளைஞர்களின் வீடுகள் உள்ள பகுதிவரை வீதிகளில் நடமாடியமையோடு இருவரையும் தேடி அலைந்தனர்.

இவ்வாறு சிங்கள இளைஞர்கள் பொல்லுகள், தடிகள் சகிதம் வீதிகளில் நடமாட அவர்களுக்குப் பாதுகாப்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். இதன்போது முல்லைத்தீவு , முள்ளியவளைப் பொலிஸாருடன் மேலதிகமாக வெலி ஓயாவில் இருந்தும் தருவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பதற்றம் அதிகரித்ததால் கொக்கிளாய் பங்குத் தந்தை, சிங்களப் பங்குத் தந்தை மற்றும் பொலிஸார் தலையிட்டு சமரச முயற்சியில் இ றங்கினர். இதனால் இரு மணி நேரத்தின் பின்னர் அங்கு அமைதி நிலைமை ஏற்பட்டது.

அதேநேரம் இப் பகுதியில் இரு வாரத்தின் முன்பு ஓர் தமிழ் இளைஞன் மீது சிங்கள இளைஞர்கள் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். நேற்று இடம்பெற்ற மோதலில் சம்பந்தப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் பொலிஸில் சரணடைந்தனர் எனக் கூறப்பட்டது.

## நாட்டின் சில இடங்களில் மழை பெய்யும் சாத்தியம்


மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் இன்றும் நாளையும் மாலை நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் குறிப்பாக, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது

# மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கிளிநொச்சியையும் உள்ளடக்கியதான யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழு 2 ஆகப் போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடும் வேட்பாளர் அறிமுகமும் நேற்று யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றது.




















காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள ஒன்றிணைவோம்!

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

கொழும்பு,ஜூன் 22

எமது பிரதேச பொருளாதாரமும் ஒரு பாரிய நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ள தமிழ் மக்கள் பேரவை அதற்காக தேர்தல் அரசியல் கடந்து எமது இலக்கினை நோக்கி ஒன்றிணைந்து பயணிக்க அனைவரையும் அழைப்பதாக ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:–

உலக வல்லரசுகளின் ஒழுங்கமைப்பையே மாற்றி அமைக்கப் போகும் கொவிட் – 19 எனப்படும் கொரோனா வைரஸ் தாக்கத்தின் விளைவுகள் இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கப் போவதற்கான சாத்தியக் கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன. இந்த நிலையில் எமது பிரதேச பொருளாதாரமும் ஒரு பாரிய நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இருக்கும் எமது பொருளாதாரத்தை தக்கவைத்து மேம்படுத்தும் திட்டமிடல்களை செய்யத்தவறின் வறுமையும் பட்டினியும் எமைச் சூழும் அபாயம் இருக்கிறது. இது எமது கல்வி, சுகாதார, அரசியல் ஸ்திரத்தன்மையிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் சாத்தியம் இருக்கிறது.

எமது பிரதேசத்தின் பொருளாதாரத் திட்டமிடல் சம்பந்தமான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பமாகி இருக்கின்றன. பல துறைசார் வல்லுனர்களும் இது சம்பந்தமான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

நிலம் மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் தக்கவைக்கும் ஒரு முக்கிய உற்பத்திச் சாதனமாக அமைகின்றது. இலங்கையின் முழுநிலப்பரப்பு 6.56 மில்லியன் கெக்ரயர்கள் ஆகும் இதிலே 82% சதவீதமான நிலங்கள் அரசுடைமை நிலங்களாகும். இந்த அரச நிலத்தில் 37% சதவீதமானவை மட்டுப்படுத்தப்பட்ட உரிமை ஆவணங்களினூடாக சிறு விவசாயிகளுக்கும் கிராம விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கும் பங்கிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுவிவசாயிகளுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டிருக்கும் அரச காணிகளின் அளவு வடக்கு கிழக்கு பகுதிகளில் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அத்துடன் இப்பகுதிகளில் இராணுவமும் பொதுமக்களின் நிலங்களை சுவீகரித்திருப்பதும் நிலமற்றோர் பலர் இருந்தும் இப்பகுதி மக்களிற்கான குடியேற்றத் திட்டங்கள் போதுமான அளவு நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும் கவலை தருவனவாக அமைவதுடன் பொருளாதார மேம்பாட்டிற்கும் தடைக்கல்லாய் அமைகிறது. அத்துடன் இந்தப்பகுதிகளில் சில காணிகளை பௌத்த புனித பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியும், வன இலாகாவிற்கு சொந்தமானது என வகைப்படுத்தியும், மகாவலி திட்டத்திற்கு உரியது என வரையறுத்தும் இருப்பதால் இந்தக் காணிகளை மக்கள் வாழ்வாதாரத்திற்குற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

தொடர்ந்து நீடிக்க இருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கும் வேலை இழப்பு, வருவாய்க் குறைவு, புலம்பெயர் தேசங்களிலிருந்து கிடைத்து வந்த வருவாயில் ஏற்படப்போகும் தாக்கங்கள், செலவின அதிகரிப்பு போன்றவை தற்பொழுது எம்முன்னே திடீரென்று எழுந்திருக்கும் சவால்கள் எனக் கொள்ளமுடியும்.

இவ்வாறான புறச் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு தேர்தல் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொது நோக்கத்திற்காக ஒன்றுபட்ட திட்டமிடுதல்களில் ஒன்றுபடுவது காலத்தின் தேவையாக அமைகிறது.

எழுந்துவரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குறுகியகால உபாயங்களாக ஆடம்பர செலவுகளைக் குறைத்தல், குடிவகைப் பாவனை, புகைத்தல் என்பவற்றை நிறுத்துதல், உள்ளூர் உற்பத்தி முயற்சிகளையும் அதன் பாவனையையும் மேம்படுத்தல், தனிநபர்களோ குழுக்களோ பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பிக்கும் போது நன்கு திட்டமிடுதலும் துறைசார் வல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெறுதலும், பயன்படுத்தப்படாதிருக்கும் நிலங்களில் உற்பத்தி முயற்சிகளை ஆரம்பித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதற்கான நீண்டகாலத் திட்டமிடல் பற்றி சிந்திக்கும் பொழுது எம்மைச் சூழவுள்ள வளங்கள் சரியான முறையில் பயன்படத்தப்படவில்லை என்பது தெளிவாகத் தென்படுகிறது. அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புப் பெறவேண்டிய தேவை எழுந்திருக்கிறது

எமது கல்விமுறை உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட எமது தேவைகளை, பாரம்பரியங்களை கொண்ட ஒரு கல்வி முறையாக அமையவில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பயிற்சியும் கல்வியும் ஒருங்கிணைந்த ஒரு கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவையை பல துறைசார் வல்லுனர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழக கல்வியும் தொழிற்பயிற்சி மையங்களுடன் இணைந்ததான ஒரு கல்வித் திட்டத்தை கொண்டதாக அமையவேண்டும் என்று பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

எந்தத் தொழில் செய்பவரும் அதிலே பயிற்சி பெற்றவராக இருப்பது அவசியமாகிறது. இதுவே தரமான சேவையையும் உற்பத்தியையும் உறுதிசெய்து, சந்தைப் போட்டிகளை வெற்றி கொண்டு, ஸ்திரமான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். விவசாய, கால்நடை, மீன்பிடி சம்பந்தமான அறிவியல் தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் மேம்படுத்தப்படவேண்டிய தேவை இருக்கிறது.

எமது கல்விமுறை எமது தேவைகள், வளங்கள் நோக்கியதாக அமையாததாலும் உள்ளூர் உற்பத்திக்கான பாரிய முதலீடுகள் ஏதும் ஏற்படுத்தப்படாத காரணத்தாலும் உள்ளூர் தொழில் வாய்ப்புக்கள் குறைந்து போக பலர் வெளிநாடு நோக்கி இடம்பெயர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

1987இல் இலங்கை யாப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆம் திருத்தத்திற்கு பின்பும் இன்றுவரை மத்திய அரசே அரசகாணிகளின் கட்டுப்பாட்டில் மேலாதிக்கம் கொண்டுள்ள நிலை காணப்படுகிறது. அத்துடன் கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளில் கூட மத்திய அரசின் கட்டுப்பாடுகள் மேலோங்கி காணப்படுகின்றன.

இத்தகைய புறச் சூழலில் நாம் எமது பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் சம்பந்தமான தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றங்கள் பயனுடையதாக அமையும். முயற்சியாளர்களுக்கு தேவையான நில ஒதுக்கீடு, அவர்களுக்கான பயிற்சியும் வழிகாட்டலும், பொருளாதார உள்கட்டுமானங்களை மேம்படுத்துதல், சிறிய தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தல், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமான உங்கள் கருத்துக்களை தமிழ்மக்கள் பேரவை எதிர்பார்த்து நிற்கிறது உங்கள் அபிப்பிராயங்களை (tpcmediaslgmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு உங்களை அன்புடன் கேட்டு நிற்பதோடு, நாம் தேர்தல் அரசியல் கடந்து எமது இலக்கினை நோக்கி ஒன்றிணைந்து பயணிக்க அனைவரையும் அழைத்து நிற்கின்றோம். – என்று உள்ளது.

# ஊடகங்களை நடுநிலையாக செயற்படுமாறு கோருகின்றார் தேர்தல் ஆணையத் தலைவர்





- வவுனியாச் செய்தியாளர்: கி.வசந்தரூபன் -

செய்திகள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளின் போது நடுநிலையாகச் செயற்படுமாறு ஊடக நிறுவனங்களிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண தேர்தல் அரச அதிகாரிகளுடன் நேற்றுடன் இடம்பெற்ற கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுவரொட்டிகள், பதாதைகள், புகைப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்த 1981 இலக்கம் 1 நாடாளுமன்ற சட்டத்திட்டங்களுக்கு அமைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், வேட்பாளரின் தேர்தல் பிரசார அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், இலக்கம் என்பவற்றை காட்சிப்படுத்த முடியும்.

அத்துடன் தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெறும் பகுதியில் மாத்திரம் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்த முடியும்.

தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களை கட்டுப்படுத்த முடியாது.

எனினும் செய்திகள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளின் போது நடுநிலையாக செயற்படுமாறு ஊடக நிறுவனங்களிடம் கோரிக்கை விடுப்பதற்கும் எதிர்பார்ப்பாக்கின்றேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பிரச்சாரம் செய்வதற்கு சகல கட்சிகளுக்கும் காலத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இக் கலந்துரையாடலில் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற தேர்தல் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், குறித்த தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள், சுகாதார நடைமுறைகளை பின்பற்றல், தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள், தபால் மூல வாக்களிப்புக்கான ஒழுங்குகள் மற்றும் தேர்தல் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் ஆகியோர் கேட்டறிந்து கொண்டமையுடன், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ–100)

# முகமாலைத் துப்பாக்கிச் சூடு; விசாரணை அறிக்கை தேவை

## வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்22

முகமாலை, காரைக்காடு குளப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் பூரண விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தவை வருமாறு:-

முகமாலை, காரைக்காடு குளப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் அதனோடு ஒட்டியதாக நிகழ்ந்த விடயங்கள் தொடர்பாக அதிக கரிசனை கொண்டிருக்கின்றேன்.

அந்தச் சம்பவம் தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வருகின்றமையையும் கவனத்தில் கொண்டுள்ளேன்.

இந்தநிலையில், இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளேன்.

சம்பவம் தொடர்பில் பூரணமான விசாரணையை முன்னெடுத்து முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளேன். அத்துடன் வடக்கு மாகாண மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், அமைதியைச் சீர்குலைக்கக் கூடாது என்பதையும் அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன் - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2020 இல் வெளியிடப்பெற்றது.